பாடம் 1

# அக்கினி ஜுவாலை

**நீங்கள் மிகவும் ஆசைப்பட்ட ஒன்றுக்காகக் காத்திருந்திருக்கிறீர்களா? இன்று, நாளை என்று அது கிடைக்காமல் ஏமாந்து இருப்பீர்கள்! பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக இயேசு தம் சீடர்களுக்கு வாக்களித்திருந்தார்; ஆனால், எப்போது என்று சொல்லவில்லை. எருசலேமில் காத்திருக்கும்படி மாத்திரம் கூறினார். அவர்கள் காத்துக்கொண்டே இருந்தார்கள். மற்றவர்களுக்கு இயேசுவை அறிவிக்க விரும்பினார்கள்; ஆனால், முக்கியமான ஒன்று அவர்களுக்குத் தேவைப்பட்டது.**

‘இன்றைக்காவது கிடைக்குமா?’ என்று எதிர்பார்த்தவராக சன்னல் ஓரமாக நின்றிருந்தார் பேதுரு. அவருடைய நண்பர்களும் அந்தப் பெரிய அறையில் கூடியிருந்தார்கள். சிலர் ஜெபித்துக்கொண்டும், வேறு சிலர் அமைதியாகப் பேசிக்கொண்டும் இருந்தார்கள். இயேசு வாக்குரைத்திருந்ததைப் பெறுவதற்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

“எருசலேமிலேயே இருங்கள்; நான் வாக்குரைத்த ஈவைப் பெறக் காத்திருங்கள். இன்னும் ஒருசில நாட்களில் ஆவியானவரின் ஸ்நானத்தைப் பெறுவீர்கள்” என்று இயேசு சொல்லியிருந்தார்.

இயேசு பரலோகம் செல்லுவதற்கு முன்பு தம் சீடர்களிடம் சொன்ன கடைசி வார்த்தைகள் இவை. அந்த நாளை பேதுரு மறக்கவில்லை! அவ்வாறு சொல்லியதும் இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காட்சி அவருடைய கண்ணுக்குள்ளேயே இருந்தது.



இயேசு எடுத்துக்கொள்ளப்பட்டதை பேதுருவும் அவருடைய நண்பர்களும் வாய்பிளந்தவாறு பார்த்துக்கொண்டிருந்

## மனன வசனம்

**இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?**

**சங்கீதம் 133:1.**

தார்கள். உடனே அவர்களுக்கருகில் இரண்டு தூதர்கள் தரிசனமானார்கள்; "நீங்கள் ஏன் வானத்தையே அண்ணாந்து பார்க்கிறீர்கள்! இயேசு எடுத்துக் கொள்ளப்பட்ட பிரகாரமே மீண்டும் இப்பூமிக்குத் திரும்ப வருவார்" என்று சிரித்த முகத்துடன் அந்தத் தூதர்கள் கூறினார்கள்.

அன்றுமுதல்பேதுருவும் பிற விசுவாசிகளும் காத்திருக்க ஆரம்பித்தார்கள். வேறு எந்தத் தகவலும் அவர்களுக்கு இல்லை. "ஆவியானவர் வரும்போது நீங்கள் வல்லமையால் நிரப்பப்படுவவீர்கள்" என்று இயேசு சொல்லியிருந்தார். அதன் அர்த்தம் என்ன?

திடீரென ஒரு சத்தம் கேட்டது. பேதுருவுக்கு அது என்னவென்று தெரியவில்லை. பெரும் புயல்போன்ற ஒரு சத்தம் அந்த அறையில் நிறைந்தது! பேதுரு ஆச்சரியத்தில் மூழ்கிப்போனார். அக்கினி ஜுவாலை போன்ற ஒரு காட்சி அங்கு காணப்பட்டது. ஒவ்வொரு நபரையும் சிறுசிறு தீச்சுடர்கள் தொட்டன. அங்கிருந்த ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள்.

வெளி தேசங்களிலிருந்து வந்திருந்த பலரும் அன்று அந்த நகரத்தில் கூடியிருந்தார்கள். பெந்தெகொஸ்தே பண்டிகையைக் கொண்டாடுவதற்கு எருசலேமிற்கு வந்திருந்தார்கள். பயங்கர காற்றின் சத்தம் கேட்டதால் அந்த வீட்டைச் சுற்றிலும் ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. இப்போது அறைக்கு உள்ளேயிருந்தவர்கள் தங்களுடைய பாஷைகளில் பேசுவதையும் அவர்கள் கேட்டடார்கள்! "இவர்களுக்கு எப்படி நம்முடைய பாஷைகள் தெரியும்?" என்று ஆச்சரியத்தோடு ஒருவரோடு ஒருவர் விசாரித்துக்



## செய்தி

**நாம் வாழும் பகுதிகளில் நாம் ஊழியம்செய்ய பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார்.**

கொண்டார்கள்.

கூடியிருந்த மக்களுக்கு முன்பாக பேதுரு எழுந்து நின்றார். அவர்களிடம் இயேசுவை பற்றிக் கூறினார். இயேசுவின் வாழ்க்கையைப்பற்றிக் கூறினார். இயேசுவின் மரணத்தைப் பற்றிக் கூறினார். இயேசுவின் உயிர்த்தெழுதலைப்பற்றிக் கூறினார். ''உங்கள் பாவங்களிலிருந்து நீங்கள் மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றார்.

அன்று 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு, தேவனுக்காக வல்லமையாகப் பேசுகிற ஒருவராக பேதுரு மாறியிருந்தார்.

### புதிர் 1

**செய்முறை:** *பெந்தெகொஸ்தே நாளில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பாடம் இருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள இரண்டாவது எழுத்தை வெட்டிவிடவும். பதில் கிடைக்கும்.*



**மஅற்பறாவலர்நகலனேளகாதடு** ________________

**அசனர்னுந்வது** ________________

**ஆழரஆாபுதபூரைுன** ________________

**வெசஉய்ணவனதிநல்** ________________

**மஓகிஓழ்னச்ளசி** ________________

**அறஉைடசகிடதேறவன்** ________________